# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றம்

---

## 2012 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பலன புத்தர் சிலையை நிருமாணிப்பதற்கான ஒழுங்கமைப்பு (கூட்டிணைத்தல்) சட்டம்

---

*(2012 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 6 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது)*

*அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது*

---

*2012, ஓகத்து மாதம் 10 ஆந் தேதிய* ***இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின்*** II *ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது*

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது

கொழும்பு 5, அரசாங்க வெளியீட்டலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்

**விலை : ரூபா 11.25** **தபாற் செலவு : ரூபா 10.00**

## *2012 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பலன புத்தர் சிலையை நிருமாணிப்பதற்கான ஒழுங்கமைப்பு (கூட்டிணைத்தல்) சட்டம்*

[*2012 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 6 ஆம் திகதி அத்தாட்சிப் படுத்தப்பட்டது*.]

*ச.வ.ஓ.(கூட்.) 33/2010*

### *பலன புத்தர் சிலையை நிருமாணிப்பதற்கான ஒழுங்கமைப் பொன்றைக் கூட்டிணைப்பதற்கானதொரு சட்டம்*

*முன்னுரை.*

"பலன புத்தர் சிலையை நிருமாணிப்பதற்கான ஒழுங்கமைப்பு" என அழைக்கப்படுவதும் அறியப்படுவதுமான ஒழுங்கமைப் பொன்று அதன் உறுப்பினர்களால் இணங்கிக்கொள்ளப்பட்ட விதிகளுக்கிணங்க சொல்லப்பட்ட ஒழுங்கமைப்போடு தொடர்புபட்ட எல்லாக் கருமங்களையும் பயனுறும் வகையில் நிறைவேற்றிக் கொண்டுநடாத்தும் நோக்கத்துக்காக இதன் முன்னர் தாபிக்கப்பட்டுள்ளதாதலாலும்:

அத்துடன் சொல்லப்பட்ட ஒழுங்கமைப்பானது எப்பல்வேறு குறிக்கோள்களுக்காகவும் கருமங்களுக்காகவும் உருவாக்கப் பட்டதோ அப்பல்வேறு குறிக்கோள்களையும் கருமங்களையும் அது இதுவரை வெற்றிகரமாக நிறைவேற்றியும் கொண்டுநடாத் தியும் வந்துள்ளதாதலாலும், அது கூட்டிணைக்கப்பட விண் ணப்பித்துள்ளதாதலாலும் அத்துடன் அத்தகைய விண்ணப் பத்தை அனுமதித்தல் உசிதமானதாகவிருக்குமாதலாலும் :

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத் தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :-

*சுருக்கப் பெயர்.*

**1.** இச்சட்டம், 2012 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பலன புத்தர் சிலையை நிருமாணிப்பதற்கான ஒழுங்கமைப்பு (கூட்டிணைத்தல்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம்.

*பலன புத்தர் சிலையை நிருமாணிப்ப தற்கான ஒழுங்கமைப்பைக் கூட்டிணைத்தல்.*

**2.** இச்சட்டம் தொடங்கும் திகதியிலிருந்தும் அதன் பின்னரும் (இதனகத்துப்பின்னர் "ஒழுங்கமைப்பு" எனக் குறிப்பீடு செய்யப் படும்) பலன புத்தர் சிலையை நிருமாணிப்பதற்கான ஒழுங் கமைப்பில் தற்போதைய உறுப்பினர்களாயிருக்கின்றவர்களும் அல்லது இத்தால் அமைக்கப்படும் கூட்டுத்தாபனத்தின் உறுப்பினர்களாக இதன்பின்னர் சேர்த்துக்கொள்ளப்படுபவர் களுமான அத்தகையோரான அத்தனையாட்களும் (இதனகத்துப்

2-PL 005142 -950 (2010/08)

பின்னர் "கூட்டுத்தாபனம்" எனக் குறிப்பீடு செய்யப் படும்) "பலன புத்தர் சிலையை நிருமாணிப்பதற்கான ஒழுங்கமைப்பு" என்னும் பெயர் மகுடத்தின் கீழ் இடையறாவழியுரிமை கொண்ட கூட்டிணைக்கப்பட்ட குழுவொன்றாக இருத்தல் வேண்டும் அத்துடன் அப்பெயர்கொண்டு அது வழக்குத் தொடுக்கலாம் என்பதுடன், அதற்கெதிராக வழக்குத்தொடுக்கவும்படலாம். பொதுஇலச்சினையொன்றை வைத்திருக்கவும், பயன்படுத்தவும் அவர்கள் விரும்பியாங்கு அதனை மாற்றவும் முழுத் தத்துவமும் அதிகாரமும் கொண்டிருத்தலும் வேண்டும்.

கூட்டுத்தாபனத்தின் பொதுக் குறிக்கோள்கள்.

**3.** கூட்டுத்தாபனம் அமைக்கப்படுவதற்கான பொதுக் குறிக் கோள்கள் பின்வருவனவாதல் வேண்டும் என இத்தால் வெளிப் படுத்தப்படுகின்றது :-

(அ) கடுகண்ணாவை, பலன, பெலுங்கலவில் புத்தர் சிலையைச் செதுக்கப்படச் செய்வித்தலும் அதனைப் பராமரிப்பதற்கு அவசியமான நடவடிக்கைகள் எடுத்தலும்;

(ஆ) இலங்கையிலுள்ள பௌத்த நம்பிக்கையைப் பின்பற்று பவர்கள் உட்பட உலகெங்குமுள்ள பௌத்தர்களிடையே தேரவாத பௌத்த மதத்தின் கோட்பாடுகளை மனதில் ஆழப்பதியவைக்க நடவடிக்கைகளை எடுத்தல் ;

(இ) இலங்கையின் பௌத்தர்களின் விழுமியங்களைப் பாதுகாப்பதற்குத் தேவையான நடவடிக்கைகளை எடுத்தல் ;

(ஈ) பௌத்த நம்பிக்கையைப் பின்பற்றுவோரிடையே பௌத்த கல்வியை மேம்படுத்துவதற்கு ஒழுங்குகளைச் செய்தல்;

(உ) கற்சிற்ப நிர்மாணக் கலையில் ஈடுபட்டிருக்கும் சிற்பிகளின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தும் நோக்கில் அவர்களுக்கு உதவுதல் ; அத்துடன்

(ஊ) பௌத்த நம்பிக்கையைப் பின்பற்றுவோரிடையே பௌத்த கோட்பாடுகளின் விழிப்புணர்வை மேம்படுத்தல்.

*கூட்டுத்தாபனத்தின் அலுவல்களை முகாமை செய்தல்.*

**4.** (1) கூட்டுத்தாபனத்தின் அலுவல்கள் இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கும் 6 ஆம் பிரிவின்கீழ் ஆக்கப்படும் கூட்டுத்தாபன விதிகளுக்கு அமையவும் கூட்டுத்தாபனத்தின் விதிகளுக்கிணங்கத் தெரிவுசெய்யப்படவேண்டிய தலைவர், இரண்டு உபதலைவர்கள், பொதுச் செயலாளரொருவர், உதவிச் செயலாளர் மற்றும் பொருளாளரொருவர் உட்பட ஒன்பது உறுப்பினர்களைக் கொண்டமைந்த முகாமைக் குழுவொன்றின்மூலம் நிருவகிக் கப்படுதல் வேண்டும்.

(2) கூட்டுத்தாபனத்தின் முதலாவது முகாமைக்குழு இச்சட்டம் தொடங்கும் தேதிக்கு நேர்முந்திய நாளன்று பதவி வகித்த பலன புத்தர் சிலை அமைப்பதற்கான ஒழுங்கமைப்பின் உறுப்பினர் களைக் கொண்டமைந்ததாதல் வேண்டும். அவர்கள், புதிய முகாமைக்குழு கூட்டுத்தாபனத்தின் விதிகளின்கீழ் தெரிவு செய்யப்படும்வரை பதவிவகித்தல் வேண்டும்.

(3) கூட்டுத்தாபனத்தின் தாபக உறுப்பினரான வண. கம்புறுகம்முவ வஜிர தேரர் கூட்டுத்தாபனத்தின் முகாமைக்குழு வின் முதலாவது தலைவராதல் வேண்டும்.

*கூட்டுத்தாபனத்தின் பொதுத் தத்துவங்கள்.*

**5.** (1) இச்சட்டத்தினதும் எழுத்திலான வேறேதேனும் சட்டத்தி னதும் ஏற்பாடுகளுக்கமைய, கூட்டுத்தாபனமானது பின்வரும் தத்துவங்களைக் கொண்டிருத்தல் வேண்டும் :-

(அ) கூட்டுத்தாபனத்தின் நோக்கங்களுக்கென பிணையுடன் அல்லது பிணையின்றி பணங்களைக் கடனெடுத்தல் அல்லது திரட்டுதல் :

ஆயினும், இச்சட்டத்தின் வேறு ஏதேனும் ஏற்பாடுக ளுக்கு முரணாகாத வகையில் எது எவ்வாறிருப்பினும் முகாமைக் குழுவானது எல்லா வெளிநாட்டு மானியக் கொடைகள், கொடைகள் அல்லது நன்கொடைகள் தொடர்பிலும் நிதி என்னும் விடயம் குறித் தொதுக்கப்பெற்ற அமைச்சரின் அமைச்சினது வெளிநாட்டு வளங்கள் திணைக்களத்தின் எழுத்தி லான முன்னங்கீகாரத்தைப் பெறுதல் வேண்டும் ;

(ஆ) முகாமைக்குழுவினால் தீர்மானிக்கப்படும் முறையொன்றில் கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களை எய்துகின்ற நோக்கில் கூட்டுத்தாபனத்துக்குச் சொந்தமான நிதிகளைப் பயன்படுத்துதலும் முதலீடு செய்தலும் ;

(இ) முகாமைக்குழுவினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான ஏதேனும் வங்கி அல்லது வங்கிகளில் வங்கிக் கணக்கைத் திறத்தல், பேணுதல் மற்றும் மூடுதல் ;

(ஈ) கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களைக் கொண்டு நடாத்துவதற்குத் தேவைப்படும் அலுவலர்களையும் சேவையாளர்களையும் நியமித்தலும் தொழிலிலமர்த்துதலும் ஒழுக்காற்றுக் கட்டுப்பாடும் நீக்குதலும் மற்றும் ஊதியமளித்தலும் ;

(உ) ஒத்த குறிக்கோள்களைக் கொண்ட உள்நாட்டு அல்லது வெளிநாட்டு நிறுவனங்களுடன் ஒன்றிணைதலும் ஒத்துழைத்தலும் ; அத்துடன்

(ஊ) கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களை எய்துவதற்கும் முன்னேற்றுவதற்கும் இடைநேர்விளைவான அல்லது உசிதமாக உள்ளவாறான எல்லா வேறு செயல்களையும் கருமங்களையும் புரிதல்.

(2) மேலே தரப்பட்டுள்ள கூட்டுத்தாபனத்தின் தத்துவங்களைப் பிரயோகிக்கையில் கூட்டுத்தாபனம் புத்தசாசன மற்றும் மத அலுவல்கள் என்ற விடயம் எந்த அமைச்சருக்குக் குறித்தொதுக்கப்பட்டுள்ளதோ அந்த அமைச்சரின் அமைச்சுச் செயலாளரின் எழுத்திலான முன்னங்கீகாரத்தைப் பெறுதல் வேண்டும்.

கூட்டுத்தாபனத்தின் விதிகள்.

**6**. (1) ஏதேனும் பொதுக் கூட்டத்திலும் அல்லது விசேட பொதுக்கூட்டத்திலும் சமுகமாயிருந்து வாக்களிக்கும் உறுப்பினர்களில் மூன்றிலிரண்டு பங்கினருக்குக் குறையாதோரின் வாக்குப் பெரும்பான்மை கொண்டும், பின்வரும் கருமங்களுள் எல்லாவற்றுக்காகவும் அல்லது எவற்றுக்காகவும் இச்சட்டத்தின் அல்லது எழுத்திலான வேறு ஏதேனும் சட்டத்தின் ஏற்பாடுகளுடன் ஒவ்வாதனவாகவிராத விதிகளையாக்குதல் கூட்டுத்தாபனத்துக்குச் சட்டமுறையானதாதல் வேண்டும் :-

(அ) பதவிதாங்குநர்களைத் தேர்ந்தெடுத்தல் அவர்களின் பதவிக்காலம், பதவியிலிருந்து விலகுதல் அல்லது பதவியை வறிதாக்குதல் அல்லது பதவியிலிருந்து நீக்குதல் அத்துடன் அவர்களின் தத்துவங்கள், கடமைகள் மற்றும் பணிகள் ;

(ஆ) பதவிதாங்குநர்கள் அல்லாத முகாமைக்குழுவின் உறுப்பினர்களைத் தேர்ந்தெடுத்தல் மற்றும் அவர்களின் பதவிக்காலம் அத்துடன் முகாமைக்குழு உறுப்பினர்களின் தத்துவங்கள், கடமைகள் மற்றும் பணிகள்;

(இ) உறுப்பாண்மையின் வகுப்பாக்கம் மற்றும் உறுப்பினர்களின் உறுப்பாண்மைக் கட்டணம், உறுப்பினர்களைச் சேர்த்துக்கொள்ளுதல், உறுப்பினர்கள் வாபஸ் பெறுதல் மற்றும் உறுப்பினர்களை நீக்குதல் ;

(ஈ) கூட்டுத்தாபன ஆதனத்தின் நிருவாகமும் முகாமையும், அதன் நிதிகளின் கட்டுக்காப்பும் கணக்குகளின் பேணுகையும் கணக்காய்வும் ;

(உ) முகாமைக்குழுவின் ஏதேனும் கூட்டத்தில் பின்பற்றப் படவேண்டிய நடவடிக்கைமுறை மற்றும் அதற்கான கூட்ட நடப்பெண், அதில் அலுவல்களைக் கொண்டு நடாத்துதல் ; அத்துடன்

(ஊ) கூட்டுத்தாபன அலுவல்களை முகாமை செய்வதற்கும், அதன் குறிக்கோள்களை எய்துவதற்கும்.

(2) கூட்டுத்தாபனத்தால் ஆக்கப்பட்ட ஏதேனும் விதி, அதே போன்ற ஒரு கூட்டத்திலும் (1) ஆம் உட்பிரிவின்கீழ் ஆக்கப்பட்ட விதி ஒன்றைப்போன்று அதே முறையிலும் திருத்தப்படலாம், மாற்றப்படலாம், அதற்கெதுவும் சேர்க்கப்படலாம் அல்லது இல்லாதொழிக்கப்படலாம்.

(3) கூட்டுத்தாபன உறுப்பினர்கள் கூட்டுத்தாபன விதிகளுக்கு அமைந்தோராதல் வேண்டும்.

*கூட்டுத்தாபனம் அசைவுள்ள மற்றும் அசைவற்ற ஆதனத்தை வைத்திருக்கலாம்.*

**7**. ஏதேனும் கொள்வனவு, மானியக்கொடை, கொடை, ஏதேனும் இறுதிவிருப்பாவணக் கையளிப்பின்மீது அல்லது வேறுவகையாக அதற்கு உரித்தாகக்கூடிய ஏதேனும் அசைவுள்ள அல்லது அசைவற்ற ஆதனத்தைக் கொள்ளவும் வைத்திருக்கவும் கூட்டுத்தாபனம் சட்டப்படி தகுதியும் ஆற்றலும் உடையதாதல் வேண்டும் என்பதுடன், அத்தகைய ஆதனமெல்லாம் இச்சட்டத்தின் நோக்கங்களுக்காகவும் 6 ஆம் பிரிவின்கீழ் ஆக்கப்படும் கூட்டுத்தாபனத்தின் விதிகளுக்கமையவும், அதனை விற்க, ஈடுவைக்க, குத்தகைக்குக் கொடுக்க, கொடுத்துமாற்ற அல்லது வேறு வகையில் கையாள உள்ள முழுத்தத்துவத்துடன் கூட்டுத்தாபனத்தால் வைத்திருக்கப்படுதலும் வேண்டும்.

*கூட்டுத்தாபனத்தின் நிதியம்.*

**8**. (1) கூட்டுத்தாபனம் அதன் சொந்த நிதியத்தைக் கொண்டிருத்தல் வேண்டுமென்பதுடன், கொடை, இறுதிவிருப்பாவணக் கையளிப்பு, நன்கொடை, ஒப்பப்பணம், உதவுதொகை கட்டணங்கள் அல்லது மானியக்கொடைகள் என்ற வகையாகப் பெறப்பட்ட எல்லாப் பணங்களும் முகாமைக்குழுவினால் தீர்மானிக்ககூடியவாறான ஒரு வங்கியில் அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட வங்கிகளில் கூட்டுத்தாபனத்தின் வரவிற்கு வைப்பிலிடப்படுதல் வேண்டும்.

(2) இச்சட்டத்தின்கீழ் கூட்டுத்தாபனத்தின் தத்துவங்களையும் கடமைகளையும் மற்றும் பணிகளையும் பிரயோகிப்பதிலும் புரிவதிலும் நிறைவேற்றுவதிலும் கூட்டுத்தாபனத்தால் உறப்பட்ட ஏதேனும் செலவினத்தைக் கொடுத்துத்தீர்ப்பதற்கு தேவைப்படுத்தப்பட்ட எல்லாப் பணத்தொகைகளும் நிதியத்திலிருந்து செலுத்தப்படுதல் வேண்டும்.

*ஒழுங்கமைப்பினால் செலுத்த வேண்டியவையும் அதற்குச் செலுத்தப்படற்பாலனவையுமான தனிசுகள்.*

**9**. இச்சட்டம் நடைமுறைக்குவரும் தேதிக்கு நேர்முந்திய நாளன்று ஒழுங்கமைப்புக்குரிய எல்லாக் கடன்களும பொறுப்புக்களும் கூட்டுத்தாபனத்தால் செலுத்தப்படுதலும் கொடுத்துத் தீர்க்கப்படுதலும் வேண்டுமென்பதுடன், ஒழுங்கமைப்புக்கு வருமதியாகவுள்ள எல்லாக் கடன்களும் செலுத்தப்படற்குரிய ஒப்பப்பணங்கள், உதவுதொகைகள் ஆகியனவும் இச்சட்டத்தின் நோக்கங்களுக்காகக் கூட்டுத்தாபனத்திற்குச் செலுத்தப்படுதலும் வேண்டும்.

**10.** கூட்டுத்தாபனத்தின் உறுப்பினர் எவரும் கூட்டுத்தாபனத்தின் தனிசுகளையும் பொறுப்புக்களையும் நிறைவேற்றும் நோக்கத்திற்காக அல்லது வேறேதேனும் நோக்கத்திற்கென உறுப்பாண்மைக் கட்டணமாக அத்தகைய உறுப்பினரிடமிருந்து வருமதியான தொகையை விஞ்சுவதாக ஏதேனும் உதவுதொகையைச் செலுத்துவதற்கு ஆளாதல் ஆகாது.

உறுப்பினர்களின் பொறுப்பை வரையறுத்தல்.

**11.** (1) கூட்டுத்தாபனமானது அதன் வருமானம் மற்றும் செலவினம், சொத்துக்களும் பொறுப்புக்களும் அத்துடன் கூட்டுத்தாபனத்தின் மற்றெல்லாக் கொடுக்கல் வாங்கல்கள் பற்றிய முறையான கணக்குகளை வைத்திருக்கச் செய்வித்தல் வேண்டும்.

கணக்குகளும் கணக்காய்வும்.

(2) கூட்டுத்தாபனத்தின் கணக்குகள் முகாமைக் குழுவினால் நியமிக்கப்படும் தகைமைபெற்ற கணக்காய்வாளரினால் கணக்காய்வு செய்யப்படுதல் வேண்டும்.

(3) இப்பிரிவில், "தகைமைபெற்ற கணக்காய்வாளர்" என்பது-

(i) இலங்கைப் பட்டயக்கணக்காளர் நிறுவகத்தின் உறுப்பினராகவுள்ள அல்லது சட்டத்தினால் தாபிக்கப்பட்ட வேறேதேனும் நிறுவகத்தின் உறுப்பினரொருவராகவும் அத்தகைய நிறுவகத்தின் பேரவையினால் கணக்காளர் ஒருவராகத் தொழில்புரிவதற்காக வழங்கப்பட்ட சான்றிதழொன்றைக் கொண்டவராகவுள்ள தனியாள் ஒருவர் ; அல்லது

(ii) கணக்காளர் குழுமமொன்றின் வதியும் பங்காளர் ஒவ்வொருவரும் இலங்கைப் பட்டயக் கணக்காளர் நிறுவகத்தின் உறுப்பினர் ஒருவராக அல்லது சட்டத்தினால் தாபிக்கப்பட்ட வேறேதேனும் நிறுவகத்தின் உறுப்பினரொருவராகவும், அத்தகைய நிறுவகத்தின் பேரவையினால் கணக்காளர் ஒருவராகத் தொழில்புரிவதற்காக வழங்கப்பட்ட சான்றிதழொன்றைக் கொண்டவராகவும் இருக்கின்றதான கணக்காளர் குழுமம் ஒன்று,

என்று பொருள்படும்.

*கூட்டுத்தாபனத்தின் இலச்சினை.*

**12.** கூட்டுத்தாபனத்தின் இலச்சினையானது, தலைவரினதும் முகாமைக் குழுவினால் தீர்மானிக்கக்கூடியவாறான கூட்டுத்தாபனத்தின் இரு உறுப்பினர்களினதும் முன்னிலையிலும் அன்றி எத்தன்மைத்தான சாசனமெதிலும் பொறிக்கப்படுதலாகாது. அவர்கள் தாங்கள் சமுகமளித்தமைக்கு அடையாளமாக அச்சாசனத்தில் தங்கள் பெயர்களை எழுதி ஒப்பமிடுதல் வேண்டுமென்பதுடன், அத்தகைய கையொப்பமிடுதல் எவரேனும் ஆள் சாட்சியொருவராக கையொப்பமிடுவதினின்றும் தனிவேறானதாதலும் வேண்டும்.

*கலைப்பின் மீது எஞ்சியிருக்கும் ஆதனம்.*

**13.** கூட்டுத்தாபனம் கலைக்கப்பட்டதன்மீது அதனது எல்லாத் தனிசுகளையும் பொறுப்புக்களையும் கொடுத்துத் தீர்த்தபின்னர் எத்தன்மைத்தானதுமான ஏதேனும் ஆதனம் எஞ்சியிருப்பின், அத்தகைய ஆதனம் கூட்டுத்தாபனத்தின் உறுப்பினர்களிடையே பகிர்ந்தளிக்கப்படுதலாகாது. ஆனால், கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களையொத்தகுறிக்கோள்களைக் கொண்டதும் அத்துடன் எந்த வேறு நிறுவனம் அல்லது நிறுவனங்கள் அதன் விதிகளால் அதன் வருமானம் அல்லது ஆதனமானது அதன் அல்லது அவற்றின் உறுப்பினர்களிடையே பகிரப்படுவதைத் தடை செய்ததோ அல்லது தடைசெய்கின்றனவோ அந்த வேறேதேனும் சில நிறுவனத்திற்கு அல்லது நிறுவனங்களிற்குக் கொடுக்கப்படுதல் அல்லது கைமாற்றப்படுதல் வேண்டும். அத்தகைய நிறுவனம் அல்லது நிறுவனங்கள் கூட்டுத்தாபனம் கலைக்கப்படும் நேரத்தில் அல்லது கூட்டுத்தாபனம் கலைக்கப்படுவதற்கு உடன்முன்னர் முகாமைக்குழுவினால் தீர்மானிக்கப்படுதல் வேண்டும்.

*குடியரசினது உரிமைகளைப் பேணுதல்.*

**14.** இச்சட்டத்தில் அடங்கியுள்ளதெதுவும், குடியரசின் உரிமைகளையேனும் அல்லது ஏதேனும் அரசியல் அல்லது கூட்டிணைக்கப்பட்ட குழுவினது உரிமைகளையேனும் பங்கப்படுத்துதலோ அல்லது பாதித்தலோ ஆகாது.

*ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.*

**15.** இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் தமிழ்ப் பிரதிகளின் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா *1,387* : (வெளிநாடு) ரூபா *1,849* : ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ஆந் தேதிக்கு முன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சகர், அரசாங்க வெளியீட்டலுவலகம், அரசாங்க தகவல் திணைக்களம், இல. *163*, கிருலபனை மாவத்தை, பொல்ஹேன்கொடை, கொழும்பு 05 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்